அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடிதம் : 04/2023

எனது இலக்கம் : EST-5/04/PCY/0035
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2023.12.28

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**தாபன விதிக்கோவையின் II ஆம் பிரிவின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 24:3:9 ஆம் உபபிரிவுக்கு உரித்தான தண்டனையொன்றை உள்ளடக்கி ஒழுக்காற்றுக் கட்டளையிள் போது சம்பளவேற்றத்தைக் குறைப்பது தொடர்பில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய ஒழுங்குமுறை**

தாபன விதிக்கோவையின் II ஆம் பிரிவின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 23:9 உபபிரிவுக்கு ஏற்ப ஒழுக்காற்றுக் கட்டளையின் மூலம் வழங்கப்பட்டுள்ள தண்டனை குற்றமிழைத்த நாள் முதல் வழங்க வேண்டும். அதற்கமைய ஒழுக்காற்று கட்டளையின் மூலம் சம்பளவேற்ற அளவினைக் குறைப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ள போதும் குற்றமிழைத்த நாள் தொடக்கம் உத்தியோகத்தர் பெற்றுள்ள சம்பளத்திலிருந்து ஒழுக்காற்றக் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளவேற்ற எண்ணிக்கையின் பெறுமானத்தைக் குறைத்ததன் பின்னர் கிடைக்கப்பெறும் தொகைக்குரித்தான சம்பளப் படிமுறையில் அவ்வுத்தியோகத்தர் குற்றமிழைத்த திகதி முதல் அமர்த்தப்படுதல் வேண்டும். இங்கு குறைக்கப்பட வேண்டிய சம்பளவேற்ற எண்ணிக்கை குற்றமிழைத்த திகதி முதல் உத்தியோகத்தரினால் உழைத்திருந்த தொடர்ச்சியான சம்பளவேற்றமாக இருத்தல் வேண்டும். இவ்வாறு குறைக்கப்பட்ட சம்பளவேற்ற எண்ணிக்கைகளை உத்தியோகத்தர் முழுமையாக இழக்கின்றார் என்பதோடு, மீட்டளிப்புச் செய்யவும் (Restoration) முடியாதுள்ளது.

02. பின்வரும் உதாரணத்தின் மூலம் இது தொடர்பாக தெளிவுபடுத்தலாம்.

உதா:- சொந்த சம்பளவேற்றத் திகதி ஆகஸ்ட் மாதம் 01 ஆந் திகதிக்கு உத்தியோகத்தர் 2015.08.01 ஆந் திகதியாகும்போது 2007.08.24 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 06/2006(IV) இன் MN-2-2006 (A) சம்பள அளவுத்திட்டத்தில் ரூபா. 15,150/- முழுமையான மாதாந்த சம்பளப் படிமுறை கிடைக்கப்பெறுவதாகவும், அச்சம்பள அளவுத்திட்டத்தில் பெற்றுக்கொண்டிருந்த சம்பள ஏற்றத்தின் பெறுமதி ரூபா. 145 எனவும் அவ்வுத்தியோகத்தர் ரூபா. 14,715/- அளவு சம்பளம் பெற்றிருந்து 2012.10.15 ஆந் திகதி மேற்கொண்ட குற்றத்திற்கு 2015.12.10 ஆந் திகதி குற்றச்சாட்டுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது எனவும் அனுமானித்த போது.

செலுத்தப்பட்டுள்ள சம்பளம்,

2012.08.01 —அ.நி.சு.06/2006(IV)→ ரூபா.14,715/-

2013.08.01 → ரூபா.14,860/-
2014.08.01 → ரூபா.15,005/-
2015.08.01 → ரூபா.15,150/-
} குற்றச்சாட்டுப் பத்திரம் வழங்கப்படவில்லை என்பதால் சம்பளவேற்றம் செலுத்தப்பட்டுள்ளது

2016.01.01 —அ.நி.சு 03/2016→ ரூபா.18,388/-+ ரூபா.9,792/ (சீராக்கற்கொடுப்பனவு)
2016.08.01 → ரூபா.18,388/-+ ரூபா.9,792/- (சீராக்கற்கொடுப்பனவு )
} குற்றச்சாட்டுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது என்பதால் சம்பளவேற்றம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது

அதன் பின்னரான சம்பளவேற்றங்கள் 05 இனைக் குறைப்பதற்கு ஒழுக்காற்றுக் கட்டளை வழங்கப்பட்டுள்ளது என அனுமானித்து, குற்றமிழைத்த 2012.10.15 ஆந் திகதி முதல் சம்பளவேற்றங்கள் 05 அதாவது, 2012, 2011, 2010, 2009 மற்றும் 2008 ஆகிய வருடங்களுக்குரித்தான சம்பளவேற்றங்கள் 05 இனை குறைத்தல் வேண்டும். அவ்வாறாயின் சம்பளத் தயாரிப்பு கீழ்வருமாறு அமையும்.

2012.08.01 —அ.நி.சு 06/2006(IV)→ ரூபா.14,715/-

2012.10.15 → ரூபா.13,990/- (சம்பள ஏற்றங்கள் 05 இனைக் குறைத்த பின்னர்)

2013.08.01 → ரூபா.14,135/-

2014.08.01 → ரூபா.14,280/-

2015.08.01 → ரூபா.14,425/-

2016.01.01 —அ.நி.சு .03/2016→ ரூபா.17,508/- + ரூபா.9,831/- ( சீராக்கற்கொடுப்பனவு )

2016.08.01 → ரூபா.17,684/- + ரூபா.9,822/- ( சீராக்கற்கொடுப்பனவு )

2012.10.15 ஆம் திகதி உத்தியோகத்தரது சம்பளம் 05 சம்பளவேற்றங்களினால் எண்ணளவில் குறைக்கப்பட வேண்டியுள்ளதோடு அத்திகதிக்கு முன்னர் காலத்துக்கேற்ப எந்தவொரு தொகையும் உத்தியோகத்தரிடம் இருந்து அறவீடு செய்யக் கூடாது. 2012.10.15 (அத்திகதி உள்ளடங்களாக) ஆம் திகதிக்குப்பின்னர் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள தொகையை அறவீடு செய்ய வேண்டும்.

03. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மற்றும் கடந்த தேசிய சம்பளம் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் உடன்பாட்டுடன் இச்சுற்றறிக்கை கடிதம் வெளியிடப்பட்டுள்ளது


ஒப்பம்./ கே.டி.என்.ரஞ்சித் அசோக
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி : 011 2 673 330
தொலைநகல் : 011 2 692 158
மின்னஞ்சல் முகவரி : ade-v@pubad.gov.lk